www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Tsl9T

தென்காசி மாவட்டம்

முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

-----

வகுப்பு 9

நேரம்: 1.30 மணி தமிழ் மதிப்பெண்கள்: 50

அ) உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 8×1=8

1) தமிழ்விடுதூது ............. என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை

இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2) அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தா மணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு

அ) வேற்றுமைத்தொகை ஆ) வினைத்தொகை

இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஈ) பண்புத்தொகை

3) நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?

அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

4) மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?

அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

5) பொருத்தமான விடையை எடுத்து எழுதுக:

கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக ................

அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் ...............

அ) வந்தான், வருகிறான் ஆ) வந்துவிட்டான், வரவில்லை

இ) வந்தான், வருவான் ஈ) வருவான், வரமாட்டான்

6) "மிசை" - என்பதன் எதிர்ச்சொல் என்ன?

அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

பாடலைப் படித்து விடை தருக:

மொட்டை கிளையொடு
நின்று தினம் பெரு
மூச்சு விடும் மரமே!
வெட்டப் படும் ஒரு
நாள் வரு மென்று
விசனம் அடைந்தனையோ?

7) இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) பாரதியார் ஆ) கவிஞர் தமிழ்ஒளி

இ) சேக்கிழார் ஈ) தமிழழன்பன்

8) இப்பாடலில் "விசனம்" என்பதன் பொருள் என்ன?

அ) கவலை ஆ) மணம் இ) வண்டு ஈ) பொய்கை

ஆ) எவையேனும் ஆறனுக்கு விடை தருக: 6×2=12

9) கண்ணி என்பதன் விளக்கம் யாது?

10) நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது?

11) வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.

12) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்புத் தருக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



13) "கூவல்" என்று அழைக்கப்படுவது எது?

14) உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

15) கலைச்சொல் தருக:

அ) Water Management

ஆ) Phoneme

16) அ) பிழை நீக்கி எழுதுக:

சர் ஆர் தா காட்டன் கல்லணையின் கட்டுமான உத்தியைக் கொண்டுதான் தௌலீஸ்வரம் அணையைக் கட்டியது.

ஆ) பொருத்தமான வினைமுற்றை எழுதுக:

இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ........... (திகழ்)

**இ) எவையேனும் நான்கனுக்கு விடை தருக: (17 - கட்டாய வினா) 4×3=12**

17) அடிமாறாமல் எழுதுக:

"காடெல்லாம் கழைக்கரும்பு" எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல்.

(அல்லது)

"நீர் இன்று அமையா" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்

18) திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உனக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.

19) மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?

20) நிலைத்த புகழைப் பெறுவதற்கு குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

21) பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

22) தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

**ஈ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: 2×5=10**

23) அ) உங்களின் நண்பர் பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் "கால்முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

(அல்லது)

ஆ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை எழுதுக.

24) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:



T.SIVAKUMAR 9943340047

**உ) விரிவான விடையளிக்க: 1×8=8**

25) அ) தண்ணீர் கதையை கருப்பொருள் குன்றாமல் எழுதுக.

(அல்லது)

ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினை எழுதுக.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com